செ.வெ.எண்: 06 நாள்:03.03.2017

# இலுப்பூரில் ரூ.262.67 இலட்சம் மதிப்பீட்டில் அரசு மகளிர் உயர்நிலைப்பள்ளிக்கு புதிய கட்டிடம் எழிலுற கட்டப்பட்டுள்ளது - மாண்புமிகு மக்கள் நல்வாழ்வு மற்றும் குடும்பநலத்துறை அமைச்சர் டாக்டர்.சி.விஜயபாஸ்கர் அவர்கள் தகவல்.

புதுக்கோட்டை மாவட்டம், இலுப்பூர் பேரூராட்சியில், பொதுப்பணித்துறையின் மூலம் புதிதாக கட்டப்பட்ட அரசினர் மகளிர் உயர்நிலைப்பள்ளி கட்டிடத்தை மாவட்ட ஆட்சித்தலைவர் திரு.சு.கணேஷ்,இ.ஆ.ப., அவர்கள் தலைமையில், தமிழ்நாடு வீட்டுவசதி வாரியத்தலைவர் திரு.பி.கே.வைரமுத்து அவர்கள் முன்னிலையில், மாண்புமிகு மக்கள் நல்வாழ்வு மற்றும் குடும்பநலத்துறை அமைச்சர் டாக்டர்.சி.விஜயபாஸ்கர் அவர்கள் திறந்து வைத்தார்.

இந்த புதிய பள்ளி கட்டிடத்தை மாண்புமிகு மக்கள் நல்வாழ்வு மற்றும் குடும்பநலத்துறை அமைச்சர் அவர்கள் திறந்து வைத்து பேசியதாவது:

தமிழகஅரசு பள்ளிக்கல்வித்துறையின் கீழ் பல்வேறு திட்டங்களை அறிமுகப்படுத்தி செயல்படுத்தி வருகிறது. அதனடிப்படையில் நமது மாவட்டத்தில் இலுப்பூர் பேரூராட்சியில் பொதுப்பணித்துறையின் மூலம் ரூ.262.67 இலட்சம் மதிப்பீட்டில் கட்டப்பட்ட அரசு மகளிர் உயர்நிலைப்பள்ளி புதிய கட்டிடம் திறந்து வைக்கப்பட்டுள்ளது. புதிதாக கட்டப்பட்ட அரசு மகளிர் உயர்நிலைப்பள்ளி கட்டிடம் இரண்டு கட்டிடங்களாக கட்டப்பட்டுள்ளது. இதில் முதல் கட்டிடம் இரண்டு தளங்களை கொண்டது. இதன் தரைத்தளம், முதல்தளம் மற்றும் இரண்டாம் தளங்களில் முறையே 4 வகுப்பறைகளுடன் என மொத்தம் 12 வகுப்பறைகளுடன் கட்டப்பட்டுள்ளது. இதன் ஒவ்வொரு தளங்களும் முறையே 294.46 ச.மீ பரப்பளவு கொண்டதாகும்.

மேலும் மற்றொரு கட்டிடம் இரண்டு தளங்களை கொண்டு கட்டப்பட்டுள்ளது. இதன் தரைத்தளத்தில் 2 வகுப்பறைகளும், 2 அறிவியல் ஆய்வகங்களும், இதன் முதல் தளத்தில் 4 வகுப்பறைகளும் கொண்டு கட்டப்பட்டுள்ளது. இதன் ஒவ்வொரு தளங்களும் முறையே 294.46ச.மீ பரப்பளவு கொண்டதாகும். இதே போன்று மூன்று கழிவறைகள், மிதிவண்டி நிறுத்துமிடம், ஆழ்துறை கிணறுடன் கூடிய குடிநீர் வசதி மற்றும் நடைபாதை தளம் உள்ளிட்ட பல்வேறு நவீன வசதிகளுடன் எழிலுற கட்டப்பட்டுள்ளது. இதன் மூலம் இப்பகுதியில் கல்வி பயிலும் மாணவிகள் போதிய இட வசதியுடன் சிறப்பாக கல்வி கற்பதுடன் நீண்ட நாள் கோரிக்கை நிறைவேற்றப்பட்டுள்ளது. எனவே அனைத்து மாணவ, மாணவிகளும் இதனை உரிய முறையில் பயன்படுத்தி சிறப்பாக கல்வி கற்று வாழ்வில் முன்னேற வேண்டும் என்றும் மாண்புமிகு மக்கள் நல்வாழ்வு மற்றும் குடும்ப நலத்துறை அமைச்சர் டாக்டர்.சி.விஜயபாஸ்கர் அவர்கள் பேசினார்.

பின்னர் மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்கள் தலைமையில், தமிழ்நாடு வீட்டுவசதி வாரியத்தலைவர் அவர்கள் முன்னிலையில், மாண்புமிகு மக்கள் நல்வாழ்வு மற்றும் குடும்பநலத்துறை அமைச்சர் அவர்கள் மாண்புமிகு முதலமைச்சரின் கண்ணொளி காப்போம் திட்டத்தின் கீழ் 10 மாணவ, மாணவிகளுக்கு விலையில்லா மூக்கு கண்ணாடிகளை வழங்கினார்.

இந்நிகழ்ச்சியில் கந்தர்வக்கோட்டை சட்டமன்ற உறுப்பினர் திரு.பி.ஆறுமுகம், மாவட்ட வருவாய் அலுவலர் திரு.அ.ராமசாமி, பொதுப்பணித்துறை செயற்பொறியாளர் திரு.செங்குட்டுவேல், மாவட்ட முதன்மை கல்வி அலுவலர் திருமதி.சாந்தி, மாவட்ட கூட்டுறவு ஒன்றியங்களின் தலைவர் திரு.இரா.சின்னத்தம்பி, வருவாய் கோட்டாட்சியர் திரு.மு.வடிவேல்பிரபு, பொதுப்பணித்துறை உதவிப் பொறியாளர் திரு.பாஸ்கர், கூட்டுறவு சங்கத்தலைவர் திரு.வி.ராமசாமி, ஆத்மா குழுத்தலைவர் திரு.பி.சாம்பசிவம், முன்னாள் பேரூராட்சித்தலைவர் திரு.குருபாபு, முன்னாள் உள்ளாட்சி அமைப்பின் பிரதிநிதிகள், கூட்டுறவு சங்கத்தலைவர்கள் மற்றும் அரசு அலுவலர்கள் பலர் கலந்து கொண்டனர்.

**செய்தி வெளியீடு: செய்தி மக்கள் தொடர்பு அலுவலர், புதுக்கோட்டை.**